**செய்தி வெளியீடு எண்:406** **நாள்: 29.06.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (29.6.2017) தமிழ்நாடு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலம் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள 340 உதவி மருத்துவர்கள் மற்றும் 165 சிறப்பு உதவி மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் அடையாளமாக 24 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பும் பொருட்டு, இந்தியாவிலேயே முதன்முறையாக சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தமிழ்நாட்டில் ஜனவரி 2012–இல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. இவ்வாரியம் இதுவரை, 8,692 மருத்துவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள், 9,190 செவிலியர்கள் உட்பட 20,862 பணியாளர்களை தேர்வு செய்துள்ளது.

தற்போது, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 340 உதவி மருத்துவர்கள் மற்றும் 165 சிறப்பு உதவி மருத்துவர்கள் புதியதாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 24 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி வி. ஜெயராமன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தலைவர் (பொறுப்பு) திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப. மருத்துவக் கல்வி இயக்குநர், டாக்டர் எட்வின் ஜோ, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர். கே. குழந்தைசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் பி. பானு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 29.6.2017**